# காமோரோஸ் அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு. நரேந்திர மோடி 10 செப்டம்பர் 2023 அன்று தில்லியில் நடைபெற்ற ஜி 20 உச்சிமாநாட்டின் போது காமோரோஸ் அதிபர் திரு. அசாலி அசோமானியை சந்தித்தார்.

ஆப்பிரிக்க ஒன்றியத்தை ஜி20இல் நிரந்தர உறுப்பினராக மாற்ற பிரதமர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அதிபர் அசோமானி நன்றி தெரிவித்தார். ஆப்பிரிக்காவுடனான இந்தியாவின் தொடர்பு மற்றும் பங்குகளை கருத்தில் கொண்டு, இந்தியாவின் ஜி20 தலைமையின் போது இது நிகழ்ந்தது என்று அவர் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். இது இந்தியா - காமோரோஸ் உறவுகளுக்கு ஊக்கமளிக்கும் என்று அவர் தெரிவித்தார். மேலும், இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்காக பிரதமருக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்

ஜி20இல் இணைந்ததற்காக ஆப்பிரிக்க ஒன்றியம் மற்றும் காமொரோஸை பிரதமர் வாழ்த்தினார். மேலும், உலகளாவிய தெற்கின் குரலை வெளிப்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகளை முன்னிலைப்படுத்தினார் மற்றும் ஜனவரி 2023இல் இந்தியாவால் கூட்டப்பட்ட உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டின் குரலை நினைவு கூர்ந்தார்.

இரு தலைவர்களும் தங்கள் இருதரப்பு நட்பு பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. இருதரப்பிலும் நடந்து வரும் பல முயற்சிகளில் திருப்தியை வெளிப்படுத்தினர், மேலும் கடல்சார் பாதுகாப்பு, திறன் மேம்பாடு மற்றும் வளர்ச்சி கூட்டாண்மை போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**